(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 4 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, யூன் 19, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0004/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் கடன் அட்டைகள் ஊடாகச் செய்யப்படும் மொத்த வியாபாரம் எவ்வளவு என்பதை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களுக்கான அட்டைக் கொடுக்கல் வாங்கல்களின் அறவிடமுடியாக் கடன் நூற்றுவீதத்தை, வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) வெளிக்கடன் அட்டைகளுக்காக பாவிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்காக, வெளியனுப்பப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவர்களின் பெயர்களைத் தனித்தனியாகவும்

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0005/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச தொழில் முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, கௌரவ ரோஹித போகொல்லாகம ஆகியோராலும் 2007 சனவரி 12ல் அதன் தவிசாளர் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களாலும் சமர்ப் பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்னே அவர்களினால் 2005 ஜீன் 1 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) மேலேயுள்ளதற்கு அமைய விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0006/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 ஆண்டுகளில் இந்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட கார்கள், லொறிகள், மற்றும் வர்த்தக ரீதியான வாகனங்கள், உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள், மற்றும் வான்களின் எண்ணிக்கையும்,

(ii) இறக்குமதி செய்யப்பட்ட நேரத்தில் அவற்றுக்கு ஏற்புடையதாகவிருந்த தீர்வைத் தொகுதியையும், ஆண்டு அடிப்படையில்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 ஆண்டுகளில் தீர்வை, உற்பத்தித்தீர்வை, மற்றும் பண்டங்கள் சேவைகள் வரி ஊடாக விதிப்பனவின் போது சம்பாதித்த மொத்த இறை வரியை ஆண்டு அடிப்படையிலும்,

(ii) கடந்த 12 மாதங்களுக்கான மேற்படி தகவல்களை மாதாந்த அடிப் படையிலும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0186/ '08

4.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமத்திய மாகாண சபையின் கீழ் இயந்திரசாதன முகவராண்மை எனும் பெயரில் நிறுவனமொன்று இயங்கி வந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நிறுவனம் 1999 இல் இருந்து 2001 ஆம் ஆண்டு வரை பண்டங்கள் — சேவைகள் வரியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தி யுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

(ii) அவ்வாறு செலுத்திராவிடின் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இந்நிறுவனம் 2001ஆம் ஆண்டில் இருந்து 2006 ஆம் ஆண்டுவரை பண்டங்கள் சேவைகள் வரியாகவோ "வற்" வரியாகவோ ஒவ்வோராண்டி லும் தனித்தனி யாக செலுத்தியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இன்றேல், வருடாந்தம் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை எவ்வள வென்பதையும்,

(iii) ஆமெனில், இவ்வரிப் பணத்தொகைகள் எக் கருமங்களுக்காகப் பிரயோகிக் கப்பட்டுள்ளனவென்பதையும்,

(iv) செலுத்தப்படாத மேற்படி வரியை அறவிடுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0187/ '08

5.

கௌரவ ஆர். பீ. ஏ. ரணவீர பதிரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாவிலாறு அணைக்கட்டினைப் புலிப் பயங்கரவாதிகள் மூடிவிட்டதன் காரணமாக எத்தனை ஏக்கர் வயல்நிலங்கள் நீரின்றி பகுதியளவிலோ முழுமையாகவோ அழிந்தனவென்பதையும்,

(ii) மேற்படி வயல்கள் அழிவடைந்தன் நிமித்தம் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையையும் அவை எந்த செலவுத் தலைப்பின் கீழ் அத்துடன் எந்த நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இழப்பீடு செலுத்தும் பொருட்டு சம்பந்தப்பட்ட இழப்பீடு பெறுநர்களைத் தெரிவு செய்வதற்காக எத்தகைய வழிமுறை கடைப்பிடிக்கப்பட்டதென்பதை யும்,

(ii) இழப்பீடு பெற்றுக்கொண்ட மற்றும் பெறவுள்ள கமக்காரர்களின் பெயர்கள், முகவரிகள், செலுத்தியுள்ள இழப்பீட்டுத்தொகை மற்றும் செலுத்திய திகதி யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி இழப்பீடு செலுத்தப்படுகையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ள னவா என்பதையும்,

(ii) ஆமெனில், எவ்வளவு பணத்தொகை வஞ்சகமான முறையில் பெறப் பட்டுள்ளதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0188/ '08

6.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பியர் உற்பத்தி செய்கின்ற மற்றும் இறக்குமதி செய்கின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை யாது,

(ii) பியர் அல்லாத ஏனைய மது பானங்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங் களின் எண்ணிக்கை யாது,

(iii) அவை எந்த நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு உரித்தாயுள்ளன, மற்றும்

(iv) மதுபானங்களை இறக்குமதி செய்கின்ற நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2007.05.30 ஆம் திகதி வரை எவ்வளவு மதுபானம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது,

(ii) அரச அங்கீகாரம் பெற்ற ஒவ்வொரு மதுபான உற்பத்தி நிறுவனத்தின் மூலமும் மேற்படி காலத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான லீற்றர்க ளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iii) மேற்படி மதுபான உற்பத்தி மற்றும் விற்பனையின் மூலம் மேற்படி காலத்தி னுள் நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கத்துக்குக் கிடைத்த வரி வருமானம் எவ்வளவு,

(iv) ஆண்டுதோறும் போதைவஸ்து உற்பத்தி அதிகரித்து வருகின்றதா,

(v) ஆமெனில், உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) "மதுவுக்கு முற்றுப்புள்ளி" வேலைத்திட்டத்திற்கு ஒத்திசைவான விதத்தில் மூடிவிடப்பட்டுள்ள அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மதுபானம் ஒரு சமூக அனர்த்தமாகக் கருதப்படுமெனில் உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0314/ '08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பூனாலை, நாகதரனே என்னும் முகவரியைச் சேர்ந்த எஸ். சுனில் ஆனந்த வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் விசேட ஆணையாளராக 2003.01.16 ஆந் திகதி தொடக்கம் 2007.02.07 ஆம் திகதி வரை பணியாற்றியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 2007.02.17 ஆந் திகதி தொடக்கம் உடனடியாக நடைமுறையிலிருக்குமாறு வட மாகாண ஆளுநரால் இவர் எக்காரணத்துக்காக பதவியிலிருந்து நீக்கப் பட்டுள்ளார் என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முதலாம் வகுப்பைச் சேர்ந்த சமூக அபிவிருத்தி உத்தியோகத்தவரான இவர் 2006.12.31 ஆந் திகதி வரை எத்தகைய குறைபாடுகளும் இல்லாமல் பிரதேச சபையின் பணிகளை மேற்கொண்டிருந்ததுடன் கணக்காய்வு விசாரணை களையும் மேற்கொண்டுள்ளார் என்பதையும்,

(ii) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இவரது சேவைகளை பாராட்டியுள்ளார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அரசியல் பழிவாங்கல் அடிப்படையில் இவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளாராவென்பதையும்,

(ii) அவ்வாறெனின், அவரை அப் பதவியில் மீண்டும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0315/ '08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதுன்கொட, மிரிஸ்வத்த, வத்துருகம வீதி, இலக்கம் 1/53 இல் வதியும் திரு. எஸ். ஏ. சேனாதீர 1994.01.07 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சனாதிபதி செயலகத்தின் நிருவாக உத்தியோகத்தர் பதவியில் சிறப்புத் தர சம்பளம் பெறுபவராக கடமையாற்றியுள்ளாரென்பதையும்,

(ii) 1994.11.23 ஆம் திகதி முதல் சனாதிபதி செயலகத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாரென்பதையும்,

(iii) 1995.02.01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சேவையிலிருந்து ஓய்வு பெற செய்யப்பட்டுள்ளாரென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) நிருவாக உத்தியோகத்தர் பதவியின் சம்பள அளவில் 1995.01.01 ஆம் திகதிக்குரிய வேதன ஏற்றம், சனாதிபதி மேலதிக செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், நியமனக் கடிதத்தின் படி ஒரு வருடம் பூராவும் செலுத்தப்பட்ட சம்பளத்தை மீள அறவிடுவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி சம்பள குறைப்பு காரணமாக இவரது ஓய்வூதியச் சம்பளம் குறைந்த சம்பள அளவில் செலுத்தப்பட்டிருப்பதால் பெரும் அநீதி ஏற்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆகையால் ஓய்வூதியம் பெறச் செய்வதில் இவருக்கு குறைவாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியச் சம்பளத்தை திருத்தி, அறவிடப்பட்ட பணத்தை மீள செலுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0316/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் பதவிகளுக்காக 1999 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2002.01.01 இல் இருந்து அமுலாகக்கூடியதாக நியமனங்கள் வழங்கப்பட்டமையின் காரணமாக அநீதி நேர்ந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) 1996 இல் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க மேற்படி பரீட்சை நடத்தப்பட்ட தேதியில் இருந்து அமுலாகக்கூடிய வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையால், 1999 இல் பரீட்சைக்குத் தோற்றியவர் களுக்கும் அவ்வாறு பரீட்சை நடத்தப்பட்ட தேதியில் இருந்தே அமுலாகக்கூடிய தாக நியமனங்களை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) (i) இப்பதவிகளுக்காக நியமிக்கப்பட்ட பெரும்பாலான பாடசாலையதிபர் களின் சம்பளங்கள் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களின் சம்பள அளவுத்திட்டத்தைப் பார்க்கிலும் குறைவாக உள்ளதென்பதையும்,

(ii) சில சந்தர்ப்பங்களில் அப்பாடசாலைகளின் உதவி ஆசிரியர்களை விடக் குறைந்த சம்பளத்தைப் பெறுகின்றனரென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஈ) இதன் விளைவாக பாடசாலை நிருவாகத்தில் இடம்பெறுகின்ற வசதியீனங் களைத் தவிர்ப்பதற்காக மேற்படி சம்பள முரண்பாடுகளை நீக்கத் தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு. ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*2.

நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரச்சபை சட்டத்தின் கீழ் விதிமுறை,— தேசிய அரசுப் பேரவை யின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 1538/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிமுறைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

பாடசாலை ஆசிரியர் ஓய்வூதிய(திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*10.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*11.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*12.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்பு ரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 09 ஆம் திகதிய 1531/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2008.03.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக் கப்படுமாக.

*16.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— தரைப்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை யுடன் சேர்த்து வாசிக்கப்படும் (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 155 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2008 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிய 1543/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*17.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட் டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக் கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை (தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்த பட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*18.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*19.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய

1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*20.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல் ,— 1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காவற்றுதுப் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் காவற்றுதுப் பணிகளுக்கான அறவீடு தொடர்பில் ஆக்கப்பட்டு 2007 யூன் மாதம் 11 ஆந் திகதிய 1501/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 160, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங் கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டுக் கோடியே எண்பது இலட்சம் (ரூபா 188,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | | |
|---|---|---|---|---|
| தலைப்பு 160 | — | சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| கருத்திட்டம் 3 (24) | — | வனவளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம் | | |
| | | மீண்டுவரும் செலவினம் | ரூ. | |
| | | மூலதனச் செலவினம் | ரூ. | 188,000,000 |
| | | மொத்தம் | ரூ. | **188,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2008, யூன் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.1),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால்

ஆக்கப்பட்டு 26 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 26

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 25002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "பிற அரசாங்கத்தின் சார்பில் கொடுப்பனவுக்கான முற் பணங்கள்" — அரச கணக்குகள் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப் பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ.5,300,000 இலிருந்து ரூ. 4,900,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.02.22
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.2),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 35 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல்

அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “அரசாங்கத் தொழிற்சாலை செய்து முடிக்கப்பட்ட வேலை முற்பணக்கணக்கு — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக் கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.140,000,000 இலிருந்து ரூ. 275,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.3),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 36 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “அரசாங்கத் தொழிற்சாலை பண்டகசாலை முற்பணக் கணக்கு — அரசாங்கத் தொழிற்சாலை என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக் கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.45,000,000 இலிருந்து ரூ. 135,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.21
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 38 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 01602 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துரைகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு — இலஞ்சம் வாங்குபவர்களை கைது செய்வதற்கான முற்பணக்கணக்கு” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.3,000,000 இலிருந்து ரூ. 6,500,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 800,000 இலிருந்து ரூ. 2,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்பட வில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.04.30
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.5),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 13 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 13

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 23202 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் “சிறைச்சாலைகள் திணைக்களத்தின் விவசாயம், கைத் தொழில் கணக்குகள் ” — சிறைச்சாலைத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித் துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.65,000,000 இலிருந்து ரூ. 75,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 66,000,000 இலிருந்து ரூ. 76,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 30,000,000 இலிருந்து ரூ. 31,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.05.05
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத் தின் கீழான தீர்மானம் (இல.6),— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 39 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க செயற்பாட்டு விடயம் "அச்சிடுதல், பிரச்சாரம் மற்றும் வினியோகம்" — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லை களை மாற்றுகின்றேன்.

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப் பட்ட செலவின் உச்ச எல்லை — ரூ.1,300,000,000 இலிருந்து ரூ. 2,398,400,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூ. 1,300,000,000 இலிருந்து ரூ. 2,264,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை — ரூ. 600,000,000 இலிருந்து ரூ. 800,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூ. 150,000,000 இலிருந்து ரூ. 1,490, 000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31. ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்)

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்

2008.05.16
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்(இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்படவேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்படவில்லையாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும், படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , தேசிய பொலிசு ஆணைக்குழுவின், தவிளாசருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட

வேண்டிய கொடுப்பனவுகளும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும், படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும்,

உறுப்பினர்களினதும் சம்பளங்களும், படிகளும் 2006. 01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் , இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும், உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும், படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை - 2004,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின 14(3) ஆம் பிரிவின் கீழ், 2006.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை, ஐந்தொகை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வீடமைப்பு, நிர்மாணத்துறை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

*35.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2005,— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின் கீழ், 2006.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டிற்கான நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை, இறுதி அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது.)

36.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

மகாவலி கலாசார மன்ற நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

றங்கா கலை நிறுவனத்தைக் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

41.

தெகிவளை, நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.